வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 06.06.2026 சனிக்கிழமை | இதழ் : 151 | பக்கங்கள் : 08

# எங்களை அசைக்க முடியும் என்று எளிதாக எண்ணிவிட வேண்டாம்!

### அமைச்சர் சுசில் ரணசிங்க எச்சரிக்கை



கொழும்பு, ஜூன். 06

தேசிய மக்கள் சக்தி என்பது வெறும் அரசியல் இயக்கம் மட்டு மல்லாமல், அதுவொரு முறையான ஒழுக்கமும், பலமான கட்டமைப்பும் கொண்ட மக்கள் சக்தி என்பதால் எங்களை அசைக்க முடியும் என யாரும் எளிதாக எண்ணிவிட வேண்டாம் என்று தேசிய மக்கள் சக்தியின் வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அவர், தங்களுக்குக் கிடைத்துள்ள அரசியல் அதிகாரம் என்பது ஊழியர்கள் மற்றும் ஒட்டுமொத்த பொதுமக்களின் நலனுக்காகவே பயன்படுத்தப்படுமே தவிர, எக்காரணம் கொண்டும் தனிப்பட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படாது என்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்களுக்கு எதிராக அரசியல் செய்யும் மாற்றுக் கட்சியின் தலைவர்கள் கூட ஊழியர்களாக இருக்கும் பட்சத்தில், அவர்களிடம் எந்தவித அரசியல் பழிவாங்கல்களோ அல்லது அநீதிகளோ காட்டப்படமாட்டாது. அதிகாரத்தை எந்த எல்லைக்குள் பயன்படுத்த வேண்டும் என்ற தெளிவு எங்களுக்கு இருக்கிறது.

இந்த அதிகாரம் எங்களது குடும்பத்தினரின்,

07

## அமெரிக்க ஒப்பந்த பின்னடைவால் இலங்கைக்குப் புதிய வரி ஆபத்து!

### ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 06

இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகக் கூறினாலும், இதுவரை எந்தவொரு முறையான ஒப்பந்தமும் எட்டப்படவில்லை. இதன் விளைவாக இலங்கைக்கு புதிதாக 12.5 வீத வரி விதிக்கப்பட வாய்ப்புள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்

07

## புத்தூரில் நடந்த கோர விபத்து; 3 இளைஞர்கள் கவலைக்கிடம்!

யாழ்ப்பாணம், ஜூன். 06

புத்தூர் பகுதியில் வெள்ளிக்கிழமை நேற்று இரவு இடம்பெற்ற கடுமையான வீதி விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மட்டுவில் பகுதியில் இருந்து புத்தூர் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் வாகனத்துடன், திடீரென வீதியைக் குறுக்காகக் கடந்த

07

## மத்திய வங்கி-நிதி அமைச்சு கைகோர்ப்பது அவசியமானது

### ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன். 06

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டுமாயின், மத்திய வங்கியும் நிதி அமைச்சும் ஒன்றிணைந்து, கைகோர்த்துச் செயல்படுவது அத்தியாவசியமானது என்று பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து காணொளி ஒன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

07

## எழுச்சிப் பாடகர் கைது; ரஜீவன் எம்.பி. விசனம்!

யாழ்ப்பாணம், ஜூன். 06

சில பாடல்கள் கலை வெளிப்பாடுகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஆயுதவாதத்தை உருவாக்குகின்றன என வாதிடுவது யதார்த்தத்துக்குப் புறம்பான அணுகுமுறையாகும் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்தார்.

பாடல் உருவாக்கம் தொடர்பில் இடம்பெற்ற கைது நடவடிக்கை தொடர்பில் தெரிவிக்கையில் அவர் இதனை கூறியுள்ளார்.

07

## டொலரின் ஏற்ற இறக்கங்கள் பொருளாதார நெருக்கடியல்ல!

### அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ

கொழும்பு, ஜூன். 06

இலங்கை ரூபாயின் மதிப்பில் ஏற்படும் தற்காலிக மாற்றங்களை ஒரு பொருளாதார நெருக்கடியாக சமூகத்திற்கு காட்ட முற்படுவது முற்றிலும் தவறான ஒரு பிரசாரமாகும் என்று தொழில் அமைச்சரும், நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார

07

## நெருக்கடிகளைத் தாண்டி நாட்டை மீட்டெடுக்க சகலரும் இணைவோம்!

### சஜித் பிரேமதாஸ அழைப்பு

கொழும்பு, ஜூன். 06

நமது நாடு எல்லா வகையிலும் பாரதூரமான ஆபத்திற்கும் அவதானத்துக்கும் முகம் கொடுத்துள்ளது. பொருளாதார மற்றும் சமூக ரீதியாக மக்களின் வாழ்வாதாரம் பல்வேறு காரணங்களால் சீர்குலைந்து, வறுமை அதிகரித்து காணப்படுகின்றன. பொருள்களின் விலையேற்றம் தொடர்ந்து கூடி வருவதால் நாளாந்தம் மூன்று வேளை உணவுகளைக் கூட உண்ண முடியாத நிலை பலருக்கு ஏற்பட்டுள்ளன. இந்நிலையில் நாட்டைப் பற்றியும், நாட்டின் 220 இலட்சம் குடிமக்களைப் பற்றியும் சிந்தித்து, நாட்டை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பது தொடர்பாக கவனம்

07

## மின்சாரத்தைச் சேமித்து நெருக்கடி நேரத்தில் பயன்படுத்தும் திட்டம் வவுனியாவில் ஆரம்பம்!



வவுனியா, ஜூன். 06

மின்சாரத்தை சேமித்து நெருக்கடியான நேரங்களில் பகிரத்தக்க சேமிப்பு கட்டமைப்பை இலங்கையில் நிறுவும் திட்டத்தின் கீழ் வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் மின்கலக் கட்டமைப்பை நிறுவும்

07

## வாகன இறக்குமதி குறையவில்லை!

கொழும்பு, ஜூன். 06

வாகன இறக்குமதி எவ்விதத்திலும் குறையவில்லை என சுங்க ஊடகப் பேச்சாளர் சந்தன புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

டொலரின் விலை அதிகரிப்பினால் ஏற்படும் அழுத்தத்தைக் குறைக்கும் நோக்குடனேயே இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், அரசாங்கம் எதிர்பார்த்த அளவிற்கு வாகன இறக்குமதியில் எவ்வித வீழ்ச்சியும் ஏற்படவில்லை என சுங்க ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## உர மானியம் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன். 06

அரசாங்கத்தினால் வழங்கப்படும் உர மானியம் ஒரு ஹெக்ரேயருக்கு 30,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் தம்மிக ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க

07

## மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடத்துக!

### பொதுஜன பெரமுன கோரிக்கை

கொழும்பு, ஜூன். 06

மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறைமையின் கீழ் நடத்துவதற்கு அரசாங்கம் ஏதேனும் திருத்த யோசனையை பாராளுமன்றத்தில் கொண்டு வந்தால் எமது கட்சி முழுமையான ஆதரவு வழங்கும். மாகாண சபைத் தேர்தலை வெகுவிரைவில் நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# யாழ். போதனா வைத்தியசாலையின் சுகாதாரத் தொண்டர்கள் போராட்டம்

## ஆட்சேர்ப்பில் முன்னுரிமை வழங்கக் கோரி

யாழ்ப்பாணம், ஜூன். 06

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நீண்ட காலமாக தொண்டர்களாக சேவையாற்றிவரும் வந்த சுகாதார தொண்டர்கள் இன்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.




சுகாதார உதவியாளர் பணியிடங்களுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்போது, சேவை அடிப்படையில் சுகாதார தொண்டர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ முன்னர் உறுதியளித்திருந்தார் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

எனினும், தற்போது நடைபெற்று வரும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் அந்த வாக்குறுதி நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும், சுகாதார தொண்டர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படாமல் பல்வேறு தரப்பினரும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதனால் அதிருப்தியடைந்த சுகாதார தொண்டர்கள், தங்களுக்கு வழங்கப்பட்டதாக கூறப்படும் வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்றுவதுடன், சுகாதார உதவியாளர் பணியிடங்களுக்கான ஆட்சேர்ப்பில் சேவை அடிப்படையில் முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

மேலும், தங்களது கோரிக்கைகள் தொடர்பில் அதிகாரிகள் விரைவான பதிலை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெயச்சந்திரமூர்த்தி ராஜீவன் மற்றும் இளங்குமரன் ஆகியோரும் கலந்து கொண்டு போராட்டக்காரர்களுக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர். (அ)

# எழுச்சிப் பாடல் சர்ச்சை; பொலிஸ் தரப்பு விளக்கம்

கொழும்பு, ஜூன். 06

தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஊக்குவிக்கும் பாடல்களைப் பாடியமைக்காக சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டது தொடர்பாக சமூக ஊடகங்களில் பரவி வரும் தவறான தகவல்கள் குறித்து இலங்கை பொலிஸார் விளக்கம் அளித்துள்ளனர்.

பொழுதுபோக்கு நிகழ்வுகளில் இசை நிகழ்ச்சிகளுக்கு முழுமையான தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் கூற்றுகள் தவறானவை என்றும் அவை மக்களை தவறாக வழிநடத்துபவை என்று பொலிஸார் அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.


மே 31 அன்று சாவகச்சேரி, நவக்குளியில் நடைபெற்ற ஒரு இசை நிகழ்ச்சியின்போது விடுதலைப் புலிகள் தொடர்பான பாடல்களைப் பாடியதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டின் பேரில், கிளிநொச்சி, உதயநகரைச் சேர்ந்த 24 வயது இளைஞர் ஒருவர் ஜூன் 2 அன்று கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பிரதேச குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் விசாரணையில், சந்தேக நபர் அந்த நிகழ்விலிருந்து இரண்டு பாடல்களைத் திருத்தி, விடுதலைப் புலிகளைப் போற்றும் வகையில் தனது சமூக வலைதளக் கணக்கில் பதிவேற்றியது தெரியவந்துள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இணையத்தில் வைரலாக பரவுவதை எளிதாக்கும் வகையில், தடை செய்யப்பட்ட குழுவுக்கு ஆதரவான உள்ளடக்கத்தைச் சேர்க்கும் விதமாக அந்தப் பதிவுகள் வேண்டுமென்றே மாற்றியமைக்கப்பட்டதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

குடிமக்கள் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்களுக்கு இணங்க செயல்பட வேண்டும் என்று இலங்கை பொலிஸார் மீண்டும் வலியுறுத்தியதுடன், தவறான சமூக ஊடக தகவல்கள் மூலம் பொது மக்கள் தவறாக வழிநடத்த வேண்டாம் என்றும் கேட்டுள்ளனர். (அ)

# ஐ.தே.கவின் தலைவர் ஹர்ஷ டி சில்வாவா?



கொழும்பு, ஜூன். 06

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவுக்கு வழங்குவதற்கு ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகி இருந்தன.

இது பற்றி நேற்று முன் தினம் இரவு ஒளிபரப்பாகிய அரசியல் விவாத நிகழ்ச்சியின்போது ஹர்ஷ டி சில்வாவிடம் கேள்வி எழுப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர் கூறியவை வருமாறு-

சமூகவலைத்தளங்களில் சிலர் வெளியிடும் பதிவுகள் தொடர்பில் பதிலளிக்க விடை இல்லை என்றே கூறவேண்டும்.

நான் எனது பயணத்தை மெதுவாகவே மேற்கொள்கின்றேன். நாம் ஒன்றிணைந்து குழுவொன்றை அமைத்து, அணியாக பயணித்து நாட்டை மீட்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்-என்றார்.

அதேவேளை, அரசாங்கத்துடன் இணையவுள்ளீர்களா என்ற கேள்விக்கு, இல்லை என ஹர்ஷ டி சில்வா உறுதியாக பதிலளித்தார்.

நாட்டை மீட்டெடுக்கவே நான் அரசியலுக்குள் வந்தேன். அந்தப் பணியை செய்ய முடியும் என நம்புகின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஒட்டுமொத்த அரச சேவைகளையும் டிஜிற்றல் மயமாக்க அரசு நடவடிக்கை

கொழும்பு, ஜூன். 06

இலங்கையின் ஒட்டுமொத்த அரச சேவைகளையும் முழுமையாக டிஜிற்றல் மயமாக்குவதற்கும், அரச அதிகாரிகளின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துவதற்குமான தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் முக்கிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

டிஜிற்றல் பொருளாதாரப் பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இதற்கான தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன.

உலகளாவிய தொழில்நுட்பப் போக்குகளுக்கு ஏற்ப அரச சேவையின் செயல்திறனை அதிகரித்தல், சேவைத் தாமதங்களைக் குறைத்தல் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு மத்தியில் காணப்படும் தொழில்நுட்பத் தயக்கங்களை ஒழிப்பதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கங்களாகும்.

இதற்கமைய, இலட்சக்கணக்கான அரச ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக மின்-கற்றல் தளம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதுடன், மொபைல் போன்கள் மூலம் குறுகிய வீடியோக்கள் வழியாகக் கற்றுக்கொள்ளும் நுண்-கற்றல் முறையும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அத்துடன், இந்த டிஜிற்றல் படிப்புகளை நிறைவு செய்வதை அரச அதிகாரிகளின் வருடாந்த செயல்திறன் மதிப்பீடுகள் மற்றும் பதவியுயர்வுகளுக்குக் கட்டாயத் தேவையாக மாற்றுவது குறித்தும், புதிய நியமனங்களைப் பெற்றுக்கொள்ளும் புதியவர்களுக்கு டிஜிட்டல் தகைமைகளைக் கட்டாயமாக்குவது குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது. (அ)

# தீவிரமடைகிறது டெங்கு அச்சுறுத்தல் 3 நாள்கள் விசேட தடுப்பு நடவடிக்கை!

கொழும்பு, ஜூன். 06

டெங்கு நுளம்பு ஒழிப்பிற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றை எதிர்வரும் 08 ஆம், 09 ஆம் 10 ஆம் திகதிகளில் முன்னெடுப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, 14 மாவட்டங்களுக்குட்பட்ட 74 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இதற்காக பொலிஸார் மற்றும் முப்படைகளின் ஆதரவு பெற்றுக்கொள்ளப்படும் என தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு பரவும் அதிக அபாயம் உள்ள பகுதிகள் குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருக்கும் நபர்களுக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை விடுக்கவும், அவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானித்துள்ளதாக தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# இனிமேல் ஒருபோதும் நான் அரசியலுக்கு வரமாட்டேன்!

## அலி சப்ரி திட்டவட்டம்

கொழும்பு, ஜூன். 06

தான் இனி ஒருபோதும் அரசியலுக்கு வரப்போவதில்லை என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போது, எவ்வளவு கோரிக்கைகள் வந்தாலும் எதிர்காலத்தில் அரசியலுக்கு வரும் எண்ணம் இல்லையா என கேள்வி எழுப்பட்டது.

“இல்லை. அரசியலுக்கு வருவதற்கு எதிர்பார்க்கவில்லை.” என அலி சப்ரி பதிலளித்தார்.

அதேவேளை, தான் அமைச்சராக பதவிவகித்த காலப் பகுதியில் தனக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை நாட்டுக்காக முழு அர்ப்பணிப்புடன் நிறைவேற்றியதாகவும் குறித்த நேர்காணலில் அலி சப்ரி குறிப்பிட்டார்.

கோட்டாபய ஜனாதிபதியான பின்னர், அலி சப்ரி அரசியலுக்கு வந்தார். அவரது ஆட்சிக் காலத்தில் தேசியப் பட்டியல் வழங்கப்பட்டது. அமைச்சு பதவியையும் வகித்தார். பொருளாதார நெருக்கடி ஏற்பட்டவேளை அமைச்சுப் பதவியை துறந்தார். பின்னர் [illegible] ஆட்சியில் நிதி அமைச்சராக செயற்பட்டார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

Eelanadu 06.06.2026 சனிக்கிழமை

பராபவ வருடம், வைகாசி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## எதிரணிக் கட்சிகளின் தலைமைத்துவ வறுமை

எதிரணி கட்சிகள் தேசிய மக்கள் சக்திக்கு எதிரான பிரசாரங்களை கடுமையாக தீவிரப்படுத்தியிருக்கின்ற போதிலும், அவற்றுக்கு இடையே அமைப்பு ரீதியில் உறுதியான ஐக்கியம் ஏற்படாத பட்சத்தில் அரசாங்கத்துக்கு சவாலை ஏற்படுத்துவது கஷ்டம் என்பதை கடந்த ஒன்றரை வருடங்களுக்கும் அதிகமான கால அரசியல் நிகழ்வுப் போக்குகள் தெளிவாக வெளிக்காட்டுகின்றன.

முன்னென்றுமில்லாத அளவுக்கு பலவீனமான நிலையில் இருக்கும் எதிரணி கட்சிகள செய்தியாளர்கள் மகாநாட்டை நடத்துவதில் மாத்திரமே கூட்டாகச் செயற்படுகின்றனவே தவிர, அரசாங்கத்துக்கு எதிராக அரசியல் நடவடிக்கைகளை கூட்டாக முன்னெடுக்க முடியாதவையாக இருக்கின்றன.

எதிரணி கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு பரந்தளவிலான கூட்டணியாக வழிநடத்தக்கூடிய மக்கள் செல்வாக்கு மிக்க தலைவர் ஒருவர் இல்லாமல் இருப்பதும் அவற்றின் தற்போதைய பின்னடைவான நிலைக்கு ஒரு முக்கிய காரணம்.

கூட்டுச் செய்தியாளர்கள் மகாநாடுகள் பெரும்பாலும் சட்ட நிபுணரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தலைமையிலேயே நடைபெறுகின்றன. நாடு எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும் அவற்றைக் கையாளுவதில் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையிலான அரசாங்கம் கையாளுகின்ற குறைபாடுடைய அணுகுமுறைகளைப் பற்றியும் விளக்கமளிப்பதில் பேராசிரியர் திறமைசாலியாக இருந்தாலும், அவர் மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக அரசியலில் ஈடுபட்டிருக்கின்ற போதிலும், மக்கள் செல்வாக்குடைய ஒரு தலைவர் அல்ல. அவர் ஒருபோதுமே மக்களால் தெரிவு செய்யப்பட்டு பாராளு மன்றத்துக்கு சென்றதில்லை.

2022 "அறகலய" மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரான சூழ்நிலையில் தவறான ஆட்சிமுறைக்கும் ஊழல் முறைகேடுகளுக்கும் எதிராக தீவிரமான பிரசாரங்களை மேற்கொண்டு ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்துக்கு " தூய்மையான "நிருவாகம்" என்று மக்கள் மத்தியில் இருந்துவரும் பிம்பத்தை சேதப்படுத்துவதிலேயே எதிரணி கூடுதல் கரிசனை காட்டுகிறது. எதிரணி குற்றஞ் சாட்டுகின்ற ஊழல் முறைகேடுகளில் அரசாங்க தலைவர்களுக்கு நேரடியான ஈடுபாடு இருக்கிறதோ இல்லையோ அவற்றுக்கான எதிர்வினையைக் காட்டுவதில் அவர்கள் தடுமாறுகிறார்கள் என்பது உண்மையே.

எது எவ்வாறிருந்தாலும், இலங்கையின் இன்றைய அரசியல் தலைவர்களிடையே ஜனாதிபதி திசநாயக்கவே மக்கள் மத்தியில் பரந்தளவிலான செல்வாக்கைக் கொண்டவராக விளங்குகிறார். அவருக்கு இணையாக வேறு ஒரு தலைவரை அடையாளம் காண முடியவில்லை. தலைமைத்துவ வறுமையில் இருந்து எதிரணிக் கட்சிகள் விடுபடும்வரை, என்னதான் அரசாங்கத்தில் குறைபாடுகள் இருந்தாலும் அதற்கு சவாலை ஏற்படுத்துவது சாத்தியமில்லை என்றே தெரிகிறது.

மீண்டும் அதிகாரத்துக்கு வருவது குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் அவரது அரசியல் வாரிசு நாமல் ராஜபக்சவும் பேசினாலும், தங்களது கடந்த கால ஆட்சியின் இலட்சணம் தொடர்பாக மக்களுக்கு இருக்கும் அபிப்பிராயத்தை புரிந்து கொள்ளாதவர்களாக அவர்கள் இருக்கிறார்கள் என்றே தோன்றுகிறது. அரசியல் மீட்சிக்கு அவர்கள் மீண்டும் இனவாதத்தையே நம்பியிருக்கிறார்கள்.

இத்தகைய பின்புலத்தில், ஐக்கிய தேசிய கட்சியின் மூத்த துணைத் தலைவரான நவீன் திசநாயக்க மூன்று தினங்களுக்கு முன்னர் கண்டியில் இடம்பெற்ற கண்டி மாவட்ட அமைப்பாளர்களின் கூட்டத்தில் தெரிவித்த கருத்து கவனத்துக்குரியதாகிறது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நிற்கும் சக்திகளும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுடன் நிற்கும் சக்திகளும் மீண்டும் ஒன்றிணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்த திசநாயக்க, அந்த இரு தலைவர்களும் ஐக்கியப்படுவதன் மூலமாக அமையக்கூடிய கூட்டணி ஒன்றின் ஊடாக மாத்திரமே நாட்டுக்கான புதிய அரசியல் திசைமார்க்கம் ஒன்று வெளிக்கிளம்ப முடியும் என்று கூறியிருக்கிறார்.

"ரணிலின் புத்திக்கூர்மையுடைய தொலைநோக்கையும் சமூகத்தின் அடிமட்டத்தில் சஜித்துக்கு இருக்கும் மக்கள் பலத்தையும் நாம் ஒன்றிணைதால், புதிய அரசியல் பயணத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும்" என்று அவர் கூறியிருக்கிறார்.

அதாவது ரணிலின் தலையையும் சஜித்தின் உடம்பையும் ஒன்றாக இணைக்க வேண்டியது அவசியம் என்று அவர் ஐக்கிய தேசிய கட்சியின் பலம் பொருந்திய முன்னாள் தலைவர்களில் ஒருவரான காமினி திசநாயக்கவின் புதல்வர் கூறுகிறார்.

இதுகாலவரையில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்களாக இருந்தவர்களில் மக்கள் செல்வாக்கு குறைந்தவரான ரணிலிலும் முன்னைய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவராக இருந்த வேளையில் உருப்படியாகச் செயற்படாமல் அநுர குமாரவே "உண்மையான " எதிர்க்கட்சி தலைவராக தன்னை முன்னிலைப்படுத்தி இறுதியில் ஜனாதிபதியாக வருவதற்கும் வழிவிட்ட சஜித்திலுமே அரசியல் மீட்சிக்கு அந்த கட்சி நம்பியிருக்கும் பரிதாபமான நிலை.

# கூட்டாகச் சேர்ந்து உண்மையை மறைக்கும் ஏமாற்றுவேலை

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் பிளவு ஏற்பட்டுள்ளதாகப் பல்வேறு கதைகளை இடுக்கட்டி. எதிர்க்கட்சியின் பிரசார இயந்திரம் மிகத் தீவிரமாக இயங்கி வருகின்றது. பலம்வாய்ந்த அரசாங்கங்கள் வீழ்ச்சியடைவதற்குக் காரணம், அவற்றின் அரசியல் எதிரிகள் இழந்த செல்வாக்கை மீண்டும் பெற்று நிலைமையை தங்களுக்குச் சாதகமாக மாற்றுவதனால் அல்ல. மாறாக, அதிகார மமதையினால் அவற்றின் தலைவர்கள் யதார்த்தத்தைக் காண முடியாமல் குருடர்களாக மாறுவதும், அதேநேரம் அரசாங்கத்தின் உறுப்பினர்கள் தலைவர்களின் அதிகாரத்திற்கு முன்னால் உண்மையை பேச அஞ்சுவதுமே அரசாங்கங்களின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாகும்.

அரசாங்க உறுப்பினர்கள் தங்களது தலைவர்களுக்கு ஓயாது புகழ்பாடுவதுடன், அவர்களின் தவறுகளையும் நியாயப்படுத்துகிறார்கள். இதன் மூலம் அவர்கள் ஒட்டுமொத்தமாகத் தற்கொலைக்கு நிகரான அரசியல் தவறைச் செய்கிறார்கள். தற்போதைய ஜே.வி.பி / தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திலும் நியாயப்படுத்த முடியாதவைகளை நியாயப்படுத்த முயலும் இவ்வாறான விசுவாசிகள் கணிசமான அளவில் உள்ளனர்.

முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, நாம் எழுதிய அண்மைய ஆசிரிய தலையங்கத்திற்கு எழுதியிரும்கும் பதிலில், கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்தின் தோல்விக்கான பழியை மற்றவர்கள் மீது சுமத்த முயன்றுள்ளார். ராஜபக்சாக்கள் நாட்டின் நலனையே தங்களது இதயத்தில் கொண்டிருந்தனர் என்று அவர் கூறியிருக்கிறார். அவர்கள் ஒருபோதும் வம்ச அரசியலில் ஈடுபடவில்லை என்றும் 2022 பொருளாதார நெருக்கடிக்கு தவறான பொருளாதார நிர்வாகத்தைத் தவிர வேறு காரணங்களே அமைந்தன என்றும் அவர் மறைமுகமாகக் குறிப்பிடுகிறார்.

கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்தின் காலத்தில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததற்கு, கோவிட்-19 தொற்றுநோயின் பொருளாதார விளைவுகளும் நல்லாட்சி அரசாங்கத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்த வேண்டியிருந்ததும் மட்டுமே காரணமல்ல. தொற்றுநோய் தானாகவே வங்குரோத்து நிலையை ஏற்படுத்தவில்லை என்றும், ஆனால் அது ஏற்கனவே காணப்பட்ட அதிக கடன் சுமை, பலவீனமான வெளிநாட்டு கையிருப்பு, மற்றும் ஏற்றுமதி மற்றும் சுற்றுலாத்துறையில் மட்டுமே தங்கியிருந்தமை போன்ற பலவீனங்களை வெளிப்படுத்திய ஒரு முக்கிய காரணியாக அமைந்தது என்றும் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அனைத்து அரசாங்கங்களும் தங்களுக்கு முந்தைய அரசாங்கங்கள் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்துவது வழமையானதே. பிரச்சினையின்

ஆரம்ப அறிகுறிகள் தென்பட்ட போதே, கோட்டாபய ராஜபக்ச அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியிருக்க வேண்டும்.

மத்திய வங்கியின் ஆலோசனையின் பேரில் செயற்பட்ட மகிந்த ராஜபக்ச அரசாங்கம் (2005-2010), உருவெடுத்து வந்த வெளிநாட்டு நாணய நெருக்கடியைச் சமாளித்து சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றதன் மூலம், யுத்த முயற்சிகளுக்குப் பாதிப்பு ஏற்படாமல் மேலாண்மை செய்ததை நாம் நினைவுகூரலாம்.

கோட்டாபய ராஜபக்ச அரசாங்கமும் மத்திய வங்கியின் ஆலோசனைகளுக்குச் செவிசாய்த்து, வரி வருவாயை அதிகரிப்பதற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் நாட்டின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பைப் பலப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருந்தால், 2022 பொருளாதார நெருக்கடியைத் தவிர்த்திருக்க முடியும்.

இலங்கை 2022 ஆம் ஆண்டில் ஒரு மென்மையான கடனைத் திருப்பிச் செலுத்த இயலாமை நிலையை (Soft Default) அறிவித்து, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட வேண்டியிருந்தது. இலங்கைக்கு இருந்த தெரிவு "மென்மையான இயலாமை நிலைக்கும்" (Soft Default) "கடினமான இயலாமை நிலைக்கும்" (உயசன ஹுநகயரடவ) இடையிலானதாகவே இருந்தது. கடினமான நிலையைத் தேர்வு செய்திருந்தால், எதிர்காலத்தில் வெளிநாட்டு ஆதாரங்களில் இருந்து கடன் பெறும் வாய்ப்புகள் முற்றாகப் பாழாகியிருக்கும். இலங்கை வங்குரோத்தாகி விட்டது என்றவுடன் , அந்த உண்மையை பகிரங்கமாக அறிவிக்க வேண்டியிருந்தது என்பதும் தான் உண்மை. .

மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது ஜனாதிபதி பதவிக்காலம் (2010-2015) மற்றும் கோட்டாபய ராஜபக்சவின் ஜனாதிபதி பதவிக்காலம் (2019-2022) ஆகியவற்றின் போதான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சிகள், உண்மையில் ராஜபக்சாக்களினால் ராஜபக்சாக்களுக்காக நடத்தப்பட்ட ராஜபக்சவினரின் அரசாங்கங்களாகவே இருந்தன.

கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்தில், ராஜபக்ச வசமிருந்த முக்கிய அமைச்சுக்களின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்தது. அரசியல் விமர்சகர்களின் கூற்றுப்படி, 2010 முதல் 2015 வரையிலும், 2019 முதல் 2022 வரையிலும் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த அமைச்சுக்களுடன் தொடர்புடைய அரசாங்கச் செலவினங்களின் பங்கு 50 சதவீதத்துக்கும் அதிகமாக இருந்தது.

மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் (2010-2015) ஏனைய உறுப்பினர்கள் இதனால் பெரும் அதிருப்தியடைந்தனர், இதன் காரணமாக 2014 ஆம் ஆண்டில் அமைச்சர்கள் உட்பட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கியமான பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று அரசாங்கத்தை விட்டு வெளியேறியது. அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன, 2015 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவுக்கு சவால் விடுத்து போட்டியிட்டு ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றினார். அதே போன்று , 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 41 பாராளுமன்ற உறுப்பினர்கள் கோட்டாபய ராஜபக்ச. அரசாங்கத்துடனான உறவை முறித்துக் கொண்டனர்.

ராஜபக்சா ஆட்சியை முடக்கிய "அரகலய" (போராட்டம்), பொருளாதாரக் இன்னல்களுக்கு, குறிப்பாக நீண்டகால எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டுக்கு எதிராகத் தொடங்கிய ஒரு உண்மையான, தலைவர்கள் இல்லாத மக்கள் போராட்டமாகவே ஆரம்பித்தது. பின்னர் சில அரசியல் சக்திகள் அதில் ஊடுருவின என்பதும் உண்மைதான்.

எனினும், அந்தப் போராட்டம் தனது வீரியத்தை இழந்து கொண்டிருந்த ஒரு தருணத்தில், 2022 மே மாதத்தில் காலி முகத்திடலில் அமைதியான முறையில் போராடிக்கொண்டிருந்தவர்கள் மீது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியது. இது நாடு தழுவிய ரீதியில் பழிவாங்கும் வன்முறை அலைக்கு வழிவகுத்தது. இந்த வன்முறையே ராஜபக்சாக்கள பதவியில் இருந்து அகற்றப்படுவதற்குக் காரணமாக அமைந்ததுடன், 2024 ஆம் ஆண்டின் ஆட்சி மாற்றத்திற்கும் வழிவகுத்தது.

இன நல்லிணக்கத்தைப் பொறுத்தமட்டில், தனது புகழ்பெற்ற இராணுவ வாழ்க்கை மற்றும் மதிக்கத்தக்க தலைமைத்துவத்திற்காக அறியப்பட்ட ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஒருவர், "பழைய சிப்பாய்" (Old Soldier) என்ற புனைப்பெயரில் எழுதிய கடிதத்தில், இவ்வருட யுத்த மாவீரர் நினைவு கூரலை அரசாங்கம் கையாண்ட விதம் குறித்து காரசாரமாக விமர்சித்திருந்தார்.

இந்தத் தலையங்க விவாதத்திற்குரிய விடயம் குறித்து அவர் பின்வருமாறு கூறியிருந்தார். "நாடுகளுக்கு இடையிலான போர்களில் வெற்றி பெற்றவர்களால் இழப்பீடுகள் கோரப்படுகின்றன. ஆனால், உள்நாட்டு மோதல்களுக்குப் பிறகு அங்கு நல்லிணக்கமே ஏற்பட வேண்டும். அங்கு எவ்வித அவமதிப்புகளும் இருக்கக் கூடாது. இலங்கையில் இறந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வு எப்போது ஒரு தேசிய நிகழ்வாக மாறும்?"

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மீண்டும் அரசியலில் எழுச்சி பெற வேண்டுமாயின், அதன் தலைவர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் சுயவிமர்சனத்தை வெறுக்கும் தங்களது போக்கைக் கைவிட வேண்டும். இதேயளவிலான சுயநீதி பேசும் போக்கு, ஏனைய எதிர்க்கட்சிகளில் உள்ள அவர்களது சக அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும்.

(தி ஐலண்ட் ஆசிரிய தரையங்கம்,
5 ஜூன் 2026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூன் - 06 சனிக்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 23
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சஷ்டி

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்னச் சின்ன கவலைகள் வந்து போகும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பொறுமை தேவைப்படும் நாள்.

**கடகம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள் நண்பர்கள் உங்களை ஆலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். அமோகமான நாள்.

**கன்னி**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புது தொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். புதிய வேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**விருச்சிகம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் குறையும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மீனம்**
உங்கள் இலக்குகளை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

# மயிலிட்டிப் பகுதியில் மக்களின் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி தொடரும் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூன். 06

வலி வடக்கு, மயிலிட்டி பகுதியில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க வலியுறுத்தி, காணி உரிமையாளர்கள் காங்கேசன் துறை - தொண்டைமானாறு வீதியின் அருகே இராணுவத்தினரின் அதிகாரிகள் பங்களா முன்பாக நேற்று ஏழாவது வெள்ளிக்கிழமை கவனயீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு மக்களால் தமது காணிகளை விடுவிக்க வலியுறுத்தி இடம்பெற்ற கவனயீர்ப்பு நடவடிக்கையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

வலி. வடக்கில் 249, 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகின்றன.

இத்தகைய சூழலில் தமது காணிகளை விடுவிக்க வலியுறுத்தி ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டங்களை முன்னெடுப்பதென காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்தனர்.

(அ)

# தரமற்ற பாணிப் பனாட்டை உற்பத்தி செய்தவருக்கு சிறை

யாழ்ப்பாணம், ஜூன். 06

தரமற்ற பாணிப் பனாட்டை உற்பத்தி செய்தவருக்கு 6 மாத காலச் சிறைத்தண்டனை விதித்த நீதிமன்றம் அதனை விநியோகித்தவருக்கு 8 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்துள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட வியாபார நிலையம் ஒன்றில் கடந்த மார்ச் மாதம் 17ஆம் திகதி நகர சபையின் பொதுச்சுகாதார பரிசோதகரான ப.தினேஷினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது, பாணிப் பனாட்டு மாதிரிகள் பெறப்பட்டு அதனுடைய தரம் தொடர்பாக பகுப்பாய்வு செய்வதற்கு அரச இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக் கப்பட்டது.

இந்நிலையில் அனுப்பி வைக்கப்பட்ட பாணிப் பனாட்டு தரமற்றது எனவும், மண் மற்றும் வெளிப்பொருள்களால் பாதிக்கப்பட்டு மனித நுகர்விற்கு ஏற்றதல்ல என பகுப்பாய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றது.

அதனை அடுத்து உணவுப் பொருளினை உற்பத்தி செய்த உரிமையாளருக்கும் அதனை விநியோகம் செய்த விநியோகஸ்தருக்கு எதிராகவும் நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது, இருவரும் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து, குறித்த உணவுப் பொருளினை உற்பத்தி செய்த உற்பத்தியாளருக்கு 6 மாத காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன் விநியோகஸ்தருக்கு 8000 தண்டப்பணம் அறவிடப்பட்டது.

(அ)

# முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் உலக சுற்றுச்சூழல் தினம் கடைப்பிடிப்பு



யாழ்ப்பாணம், ஜூன். 06

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உலக சுற்றுச்சூழல் தினம் மிகவும் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு காலநிலையில் ஏற்பட்டு வரும் பாதகமான மாற்றங்களைக் கட்டுப்படுத்துவதில் மாணவரின் பங்களிப்புகள் குறித்து உரையாற்றியிருந்தார்.

பாடசாலையின் அதிபர் ஆ. றஜீவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தார்கள். முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் கு. கணேசமித்திரனின் வேண்டுகோளுக்கு அமைவாக பழைய மாணவர்களால் பாடசாலையில் பப்பாசிப் பண்ணை ஒன்றை அமைப்பதற்குத் தேவையான 200 பப்பாசிக் கன்றுகள் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசனால் கையளிக்கப்பட்டுள்ளது. சம்பிரதாய பூர்வமாக அவற்றின் நடுகையும் இடம்பெற்றது.

(அ)

# பொன் சிவகுமாரனின் 52ஆவது நினைவேந்தல் உரும்பிராய் சந்தை வளாகத்தில் அனுஷ்டிப்பு





யாழ்ப்பாணம், ஜூன். 06

தமிழின விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த முதல் தியாகி பொன் சிவகுமாரனின் 52 ஆவது நினைவு தினம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

உரும்பிராய் சந்தை வளாகத்தில் அமைந்துள்ள பொன் சிவகுமாரனின் நினைவிடத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சுடர் ஏற்றப்பட்டு, பொன் சிவகுமாரனின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முதியோர் இல்லங்களுக்கு இனி புதிய விதிமுறைகள்!

## களுத்துறை தீ விபத்தை அடுத்து நடவடிக்கை

கொழும்பு, ஜூன். 06

களுத்துறை அங்குருவா தொட்ட முதியோர் இல்லத்தில் ஏற்பட்ட கொடூர தீ விபத்தைத் தொடர்ந்து, நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து முதியோர் இல்லங்களையும் பதிவு செய்வதையும் ஒழுங்குபடுத்துவதையும் கட்டாயமாக்கும் புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான விரிவான வழிகாட்டுதல்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு, மாகாண சபைகளின் ஒப்புதலுக்காக அனுப்பப்படவுள்ளதாகக் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக அதிகாரமளித்தல் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

தற்போது வரை நாட்டில் 455 முதியோர் இல்லங்கள் உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டு, 10ஆயிரத்திற்கும் மேற்பட்ட முதியவர்களுக்குப் பராமரிப்புச் சேவைகளை வழங்கி வரும் போதிலும், கணிசமான எண்ணிக்கையிலான நிறுவனங்கள் எவ்வித முறையான பதிவுமின்றியே இயங்கி வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்மொழியப்பட்டுள்ள புதிய விதிமுறைகளின் கீழ் அனைத்து இல்லங்களுக்கும் பதிவு கட்டாயமாக்கப்படவுள்ளதுடன், முறையான கண்காணிப்பு மற்றும் பராமரிப்புத் தரநிலைகள் உறுதி செய்யப்படவுள்ளன.

இதேவேளை, கடந்த புதன்கிழமை அங்குருவாதொட்ட, படகொட முதியோர் இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பன்னிரண்டு முதியவர்கள் உயிரிழந்ததுடன், மேலும் எண்மர் காயமடைந்த சோகச் சம்பவத்தில், பாதிக்கப்பட்ட முதியவர்களுக்கு அத்தியாவசிய உதவிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் விபத்து நடந்த இடத்திற்கு நேரில் சென்று இதற்கான பணிகளை முடுக்கிவிட்டுள்ளார்

உத்தியோகபூர்வ பதிவு எதுவுமின்றி சட்டவிரோதமாக நடத்தப்பட்ட குறித்த இல்லத்தின் பணிப்பாளர் ஹொரணை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

# கோட்டாவை சிக்க வைக்க சி.ஐ.டியினர் சதித் திட்டம்!

## சாடுகின்றார் சரத் வீரசேகர



கொழும்பு, ஜூன். 06

"கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்ட அரசியல் சூழ்ச்சியே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவமாகும் எனக் காண்பிப்பதற்கு சி.ஐ.டி. சதித் திட்டம் தீட்டிவருகின்றது."

-இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் முக்கியஸ்தரும், முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருமான சரத் வீரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

நாம் நீதிமன்ற தீர்ப்பை விமர்சிக்கவில்லை. சி.ஐ.டியின் கோரிக்கையின் நோக்கம் பற்றியே தெளிவுபடுத்துகின்றோம்.

சுரேஷ் சாலே இன்னமும் தடுப்பில் உள்ளார். அவர் வதைகளுக்கு உட்படுத்தப்படுகின்றார்.

தற்போதுள்ள சி.ஐ.டி. பணிப்பாளர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர், தேசிய மக்கள் சக்தியின் பிரசார மேடையில் பேசியவர்கள். எனவே, இது முற்றிலும் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை முன்னெடுக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விசாரணைகளில் கோட்டாபய ராஜபக்ஷ, சுரேஸ் சாலே ஆகியோரின் பெயர்கள் அடிபடவில்லை.

எனவே, எவ்.பி.ஐ. ஆல்கூட கண்டுபிடிக்க முடியாமல்போனதையா சி.ஐ.டி. கண்டுபிடிக்க முற்படுகின்றது?

அரசியல் தஞ்சத்துக்காகவே ஆசாத் மௌலானா சர்ச்சைக்குரிய தகவல்களை வெளியிடுகின்றார். அந்த கருத்துகளை அடிப்படையாகக்கொண்டு விசாரணை இடம்பெறுவது ஏற்புடையது அல்ல-என்றார்.

# எந்த தேர்தலையும் எதிர்கொள்ள தயார்!

## நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்



கொழும்பு, ஜூன். 06

"எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தயார். தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் கூட்டணி பற்றி பேசலாம். தற்போது அனைத்து எதிரணிகளும் கிராமங்களுக்கு சென்று மக்களை தெளிவுபடுத்த வேண்டும்."

-இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

அரசாங்கம் மக்கள் பற்றி சிந்திப்பதில்லை. மாறாக அனைத்து சுமைகளும் மக்கள் மீது திணிக்கப்படுகின்றன. இந்த அரசாங்கத்தின் இயலாமை புலப்பட்டுவருகின்றது.

எந்த கட்சியின் ஆயுள் குறைந்துவருகின்றது என்பதை அறிய தேர்தல் நடத்தப்பட வேண்டும். மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டால் நல்லது.

ஏனெனில் ஜனாதிபதியின் பிரதிநிதிகளிடம் அல்லாமல், மக்கள் பிரதிநிதிகளிடமே ஆட்சி ஒப்படைக்கப்பட வேண்டும். அப்போதுதான் பொறுப்புகூறல் ஏற்படும்.

நாட்டு மக்களுக்கு இந்த அரசாங்கம் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றப்படும்வரை நாம் இந்த அரசாங்கத்துடன் அரசியல் ரீதியில் மோதுவோம்.

நாம் வலுவான சக்தியாக மீண்டெழுந்துள்ளோம். எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள தயார்.

நாம் பொதுஜன பெரமுன கட்சியாகும். போட்டிக்கு முன்னர் நாம் பயிற்சியில் ஈடுபட வேண்டும். இறுதியில் அணியைத் தெரிவுசெய்யலாம்-என்றார். (அ)

எரிபொருள் விலை நெருக்கடி;

# நாளாந்த டீசல் நுகர்வினை அவசரமாக 500 தொன்னால் குறைக்க முன்மொழிவு!

கொழும்பு, ஜூன். 06

மத்திய கிழக்கு நெருக்கடியின் பின்விளைவுகளைச் சமாளிக்கும் வகையில் அரசாங்கம் ஒரு நாளைக்கு 500 தொன் டீசல் நுகர்வை அவசரமாகக் குறைக்கவேண்டும். ஆனால் அதற்கான குறிப்பிட்ட நடவடிக்கை எதுவும் இதுவரை ஒப்புக்கொள்ளப்படவில்லை என்று எரிசக்தி அமைச்சர் அருண கருணாதிலக கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏனைய பல நாடுகளைப் போலவே, இலங்கையும் அதிகரித்து வரும் எரிபொருள் விலைகளால் போராடி வருகிறது.

கியூ.ஆர். குறியீட்டு முறையின் கீழ் விநியோகம் சீரமைக்கப்பட்ட பின்னர் தினசரி டீசல் நுகர்வு சராசரியாக சுமார் 4200 தொன்களாக உள்ளது.

அந்நியச் செலாவணியைச் சேமிப்பதற்காக, இந்த நுகர்வை மேலும் குறைந்த பட்சம் 500 தொன்கள் குறைக்கவேண்டும்.

இருப்பினும், இது தொடர்பில் அரசாங்கம் எந்தவொரு குறிப்பிட்ட நடவடிக்கையையும் உறுதிப்படுத்தவில்லை-என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மாணவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்துவதற்கு டிஜிற்றல் வகுப்பறை!

## சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவிப்பு

மட்டக்கலப்பு, ஜூன். 06

இலங்கை மாணவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்துவதற்காக, டிஜிற்றல் வகுப்பறை மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் சீனா ஆதரவளித்துள்ளது என இலங்கைக்கான சீனத்தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.



இலங்கைக்கான சீனத்தூதுவர் கீ சென்ஹொங் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் மட்டக்களப்புக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டம் கல்குடா கல்வி வலயத்திங்குட்பட்ட கிரான் புதிய கொலனி சிவ வித்தியாலயத்திற்கு சீனாவின் சகோதர பாசம் திட்டத்தின் கீழ் போட்டோ கொப்பி இயந்திரம், பாடசாலை மாணவர்களுக்குரிய கற்றல் உபகரணங்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோருக்கும் உதவிகளையும் அவர் வழங்கினார்.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சீன தூதுவராலயத்தின் பிரதிநிதிகள், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள், பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர். மட்டக்களப்பு மாவட்ட சிவில் அமைப்பின் தலைவர் ந.துசியந்தன், போசகர் எஸ்.மாமாங்கராஜா, செயலாளர் த.வசந்தராஜா, உள்ளிட்ட கலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய சீனத் தூதுவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் மாணவர்களுக்காகப் கற்றல் உபகரணங்கள், மற்றும் இப்பகுதி மக்களுக்கு 16 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள உலர் உணவுப் பொருள்களையும், வழங்கி வைக்கின்றோம். குறிப்பாக, மாணவர்களின் வேண்டுகோளுக்கு உதவும் வகையில் இப்பாடசாலைக்கு ஒரு நகல் எடுக்கும் இயந்திரத்தை வழங்குகிறோம். இந்தப் பொருள்கள், சீன மக்களின் அன்பு, நட்பு மற்றும் நல்வாழ்த்துக்களை உங்கள் அனைவருக்கும் கொண்டு சேர்க்கும் என்று நம்புகிறோன்.

சீனாவும் இலங்கையும் நல்ல நண்பர்கள். நாங்கள் சகோதரர்களைப் போலவே ஒருவருக்கொருவர் ஆதரவளித்து உதவுகிறோம். சீன மக்கள் எப்போதுமே இலங்கை மக்கள் மீது, குறிப்பாக இங்குள்ள கிழக்கு மாகாணத்தில் உள்ள எங்கள் நண்பர்கள் மீது அக்கறை கொண்டுள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக, நான் இந்த அழகான கிழக்கு மாகாணத்திற்குப் பலமுறை வருகை தந்துள்ளேன். இங்கு அற்புதமான மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களைச் சந்திக்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைக்கின்றது. சில பயனுள்ள பொருட்களைக் கொண்டு வந்து, அனைவரின் வாழ்க்கையையும் சற்றே எளிதாகவும் சிறப்பாகவும் மாற்றுவதற்கு எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்-என்றார்.

இதனிடையே இந்நிகழ்வின் பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்த சீனத் தூதுவர் உள்ளிட்ட குழுவினர் ஏற்கனவே சீன தூதுவராலயத்தினால் அவ்வைத்தியசாலைக்கு மட்டக்களப்பு மாவட்ட சிவில் அமைப்பினூடாக வழங்கப்பட்ட 240 இருக்கைகளைப் பார்வையிட்ட பின்னர் வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். (அ)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு வழங்குவதில் அரசு இழுத்தடிப்பு!

## இம்ரான் எம்.பி குற்றச்சாட்டு

திருமலை, ஜூன். 06

திருகோணமலை மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு வழங்குவதில் அரசாங்கம் வேண்டுமென்று இழுத்தடிப்புகள் செய்து வருவதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த கால உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த திருகோணமலை மாவட்ட மக்கள் தமது சொந்த இடங்களுக்கு மீள்குடியேறிய போதிலும் வீடுகள் அழிவடைந்துள்ளமையால் தற்காலிக இருப்பிடங்களில் வசித்து வருகின்றனர்.

அரசாங்கத்தின் வீட்டுத் திட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களது தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு அவர்களது பெயர்கள் உள்வாங்கப்பட்ட போதிலும் வீட்டுக்கான கொடுப்பனவுகள் வழங்குவதில் இழுத்தடிப்புகள் காணப்படுகின்றன.

சுற்றறிக்கைகளுக்கப்பால் மேலதிக ஆவணங்கள் கோரப்பட்டு அவை சமர்ப்பிக்கப்படவில்லை என்ற காரணத்தினால் பல வீடுகளுக்கான கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்தவர்கள் தாம் இடம்பெயர்ந்தவதை நிறூபிக்கின்றனர். கிராம உத்தியோகத்தர்கள் இடம்பெயர்ந்ததை உறுதிப்படுத்துகின்றனர். வீடு பாதிக்கப்பட்டதை நேரில் அவதானித்து சிபார்சுக்குழு சிபார்சு செய்துள்ளது. வீட்டுப் பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான வழிகாட்டலின்படி உரிய தகைமைகள் உள்ளன. புனர்வாழ்வு அட்டைகள் உள்ளன.

இப்போது இம்மக்களிடம் இதற்கு மேலதிகமாக பொலிஸ் அறிக்கை கோரப்படுகின்றது. சுற்றறிக்கையில் குறிப்பிடப்படாத விடயங்களை ஏன் கேட்கிறீர்கள் என்று கேட்டபோது மேல்மட்ட உத்தரவு என்று கூறப்படுகின்றது.

இதன்படி பொலிஸ் அறிக்கையை தொலைத்த பொதுமக்கள் பொலிஸ் நிலையம் சென்று அதன் பிரதியைக் கோரினால் பழைய ஆவணங்கள் எதுவுமில்லை என்று பொலிஸ் நிலையங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, அரசாங்கம் வீடு வழங்குவது போல் காட்டி அதன வழங்காமல் இருப்பதற்கான முயற்சிகளை முன்னெடுக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. இது ஒரு கையால் கொடுத்து மறுகையால் பறிப்பது போன்ற செயலாகும்-என்றார். (அ)

# காளி அம்பாள் சிலை குமுக்கனில் பிரதிஷ்டை!



அம்பாறை, ஜூன். 06

கிழக்கு மாகாணத்தின் தென் திசைஎல்லையான குமுக்கன் நதி தீரத்தில் பன்னெடுங்காலமாக எழுந்தருளி அருள் சாதித்துக் கொண்டிருக்கும் குமுக்கன் காளியம்மன் ஆலயத்திற்கு புதிய அம்மன் சிலை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டுள்ளது.

சைவா சமய அமைப்பு இதற்கான ஏற்பாடுகளை செய்தது.

ஒன்றரை வருடங்களுக்கு மேலாக உடைந்த நிலையில் காணப்பட்ட குமுக்கன் காளி அம்மன் திருச்சிலை, அம்மன் அருள்வாக்கின்படி சைவா சமய பணியாளர்கள் அமைப்பின் முன்னெடுப்பில் புதிய சிலையாக வடிவமைக்கப்பட்டு, புனிதமாக பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இப்புனிதப் பணி, சைவா சமய பணியாளர்கள் அமைப்பின் தலைவர் [illegible] தலைமையில் நடைபெற்றது.

# இயற்கையை பாதுகாப்பது குறித்து மாணவர்களை விழிப்பூட்டும் நிகழ்வு



அம்பாறை, ஜூன். 06

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, இயற்கையை பாதுகாப்பது தொடர்பில் மாணவர்களை விழிப்பூட்டும் விசேட நிகழ்வு சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க அவர்களின் “கிளீன் சிறீலங்கா” தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மாணவர்களிடம் ஏற்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சுற்றுச்சூழலை பாதுகாப்பதின் அவசியம், பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்தல், இயற்கை வளங்களை பாதுகாப்பது மற்றும் தூய்மையான சூழலை உருவாக்குவதற்கான நடைமுறைகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. (அ)

# கல்முனையில் சூழல் தினம்!



அம்பாறை, ஜூன். 06

சர்வதேச சூழல் தினத்தை அனுஷ்டிக்கும்முகமாக கல்முனை அஸ்-ஸஹ்றா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜிதிய்யாவினால் பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன.

முதலில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு பாடசாலையில் சிரமதான நிகழ்வுகள் இடம்பெற்றன.

அதனை தொடர்ந்து நேற்று பாடசாலை அதிபர் தலைமையில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது இயற்கை ஒரு மடல் எனும் தொனிப்பொருளில் பிளாஸ்ரிக் மாசுபாட்டை முடிவுக்கு கொண்டு வருதல் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் அடங்கிய விடயங்கள் மாணவர்களின் சுற்றுச்சூழல் தொடர்பான ஆற்றுகைகள் ஊடாக இடம்பெற்றன.

நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள் எதிர்காலத்தில் பிளாஸ்ரிக் பாவனையை இழிவாக்குவதில் தம்மால் இயன்ற பங்களிப்பை வழங்க உறுதி பூண்டிருந்தனர். (அ)

# யோகா பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

திருமலை, ஜூன். 06

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஆதிகோணேஸ்வரா மகாவித்தியாலயத்தில் யோகா பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த மாணவ மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் அனுசரணையுடன், தம்பலகாமம் பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த யோகாப் பயிற்சி பாடநெறியை வைத்தியர் எச்.எம்.ஹாரிஸ் வழங்கினார்.

24 மணித்தியாலம் கொண்டதாக அமைந்த இப்பாடநெறியில், தரம் 6 முதல் 9 வரையான 40 மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்தனர். இதில், மாணவர்களின் உடல்நலம் மற்றும் மன ஆரோக்கியம் போன்ற விடயங்களை எவ்வாறு பேணுல் என்பது தொடர்பாகவே இப்பயிற்சி நெறி அமைந்தது.

பாடசாலையின் அதிபர் ஆர்.பி.ராஜாசுரேஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் வைத்தியர் எம்.ஏ. நபீல் பிரதம அதிதி கலந்து கொண்டு சிறப்பித்ததுடன், மாணவர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கினார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## புத்தூரில் நடந்த...

ஓட்டோ மோதியதன் விளைவாக இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மோதலின் தாக்கத்தால் டிப்பர் வாகனம் ஓட்டோவின் மீது ஏறிச் சென்றதாகவும், அதில் பயணித்த மூன்று இளைஞர்களின் கால்களில் பாரிய காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ)

## எங்களை அசைக்க...

உறவினர்களின் அல்லது தனிப்பட்டவர்களின் நலன்களுக்காக ஒருபோதும் பயன்படுத்தப்பட மாட்டாது.

எங்களுக்குப் பின்னால் மிகச் சிறந்த தொழிற்சங்கக் கட்டமைப்பும், மாணவர் இயக்கங்களும் தளம் அமைத்துக் கொடுத்துள்ளன.

அத்துடன் நாட்டின் பொருளாதாரத் தூண்களாக விளங்கும் விவசாயிகளின் அமைப்புகளும், பெண்களின் பேராற்றல் மிக்க மகளிர் முன்னணியும் எங்களோடு பயணிப்பதுடன், நாடெங்கிலும் பரந்து விரிந்து கிடக்கும் இலட்சக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்ட வலுவானதொரு வலையமைப்பு தேசிய மக்கள் சக்தியிடம் உள்ளது.

எங்கள் தரப்பில் உள்ள தனி நபர்களை இலக்கு வைத்துத் தாக்கினாலும் அல்லது நாங்கள் பேசும் வார்த்தைகளைத் தவறாகக் கோடிட்டுக் காட்டி விமர்சித்தாலும் எங்களை வீழ்த்திவிட முடியாது. நாங்கள் விமர்சனங்களைத் தாங்கி, அவற்றுக்கு முகம்கொடுத்துப் பழகியவர்கள்.

எனவே, அவதூறுகளையோ, விமர்சனங்களையோ முன்வைத்து எங்களைப் பின்வாங்கச் செய்யலாம் என யாரும் எளிதாக எண்ணிவிட வேண்டாம். எங்களது அரசியல் என்பது தங்களின் சொந்த நலனுக்காக அன்றி, நாட்டின் எதிர்காலத்திற்காகவும், நாட்டின் பிள்ளைகளின் நலனுக்காகவும் மட்டுமே அர்ப்பணிக்கப்பட்டது - என்றார். (அ)

## எழுச்சிப் பாடகர்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அநுர இலங்கையில் மீண்டும் யுத்த சூழ்நிலை உருவாகாது எனவும், விடுதலைப்புலிகள் போன்ற ஆயுத இயக்கங்கள் மீள உருவாகும் வாய்ப்பு இல்லை எனவும் தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சில பாடல்கள் அல்லது கலை வெளிப்பாடுகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அவை ஆயுதவாதத்தை உருவாக்குகின்றன என வாதிடுவது யதார்த்தத்திற்குப் புறம்பான அணுகுமுறையாகும்.

கலை, இலக்கியம் மற்றும் இசை என்பவை மக்களின் வரலாறு, நினைவுகள், உணர்வுகள் மற்றும் அனுபவங்களை வெளிப்படுத்தும் சமூகப் பிரதிபலிப்புகளாகும். அவற்றை குற்றம்சாட்டுவதற்குப் பதிலாக, அவை தோன்றுவதற்கான சமூக மற்றும் அரசியல் பின்னணிகளைப் புரிந்துகொள்வதே முக்கியமானதாகும்.

தமிழ் மக்கள் இன்னும் பல தீர்க்கப்படாத பிரச்னைகளை எதிர்கொண்டு வருகின்றனர். காணி, காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் அதிகாரப் பகிர்வு, பொருளாதார முன்னேற்றம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல விடயங்களில் நியாயமான தீர்வுகள் தேவைப்படுகின்றன. இவ்வாறான அடிப்படைப் பிரச்னைகள் முழுமையாகத் தீர்க்கப்படாதவரை, மக்களின் உணர்வுகள், நினைவுகள் மற்றும் அவற்றின் கலை வெளிப்பாடுகள் தொடர்ந்து வெளிப்படுவது இயல்பான ஒன்றாகும்.

எனவே, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தையும் பரஸ்பர புரிதலையும் வலுப்படுத்தும் நோக்கில், எந்தவொரு தரப்பினரும் தேவையற்ற சர்ச்சைகள் அல்லது உணர்ச்சி தூண்டல்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடாமல், மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பணிகளில் கவனம் செலுத்துவது காலத்தின் தேவையாகும். அதுவே நிலையான சமாதானத்திற்கும் தேசிய ஒற்றுமைக்கும் வழிவகுக்கும்-என்றார். (அ)

## அமெரிக்க ஒப்பந்த...

போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதார நிலைமை திருப்திகரமாக இல்லை. அதிகாரப்பூர்வ டொலர் பெறுமதி **340** ரூபாயாக உள்ள போதிலும், கறுப்பு சந்தையில் அதன் பெறுமதி **345** ரூபாய்க்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. வட்டி விகிதத்தை **1** வீதத்தினால் உயர்த்தி தற்காலிகமாக நிலைமை சீரமைக்கப்பட்டாலும், தற்போது மீண்டும் வீழ்ச்சி தொடங்கிவிட்டது. சந்தை என்பது நம்பிக்கையின் அடிப்படையில் இயங்குவது, அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை சிதைந்து வருவதால் சந்தையும் வீழ்ச்சியடைந்து வருகிறது. எல்.சி வரவுகளுக்கான தொகையை வங்கிகள் செலுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. மக்கள் ரூபாய் பெறுமதி மேலும் வீழ்ச்சியடையும் என்ற அச்சத்தில் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றங்களை நிறுத்தி வைத்துள்ளனர். இதேபோல ஏற்றுமதியாளர்களும் தங்களது வருமானத்தை நாட்டிற்குள் கொண்டு வரத் தயங்குகின்றனர். உலகளாவிய போர்ச் சூழல் ஏனைய நாடுகளைப் பாதித்தாலும், அமெரிக்காவுடன் பரஸ்பர ஒப்பந்தங்களைச் செய்துள்ள நாடுகளுக்குப் பாதிப்பில்லை. இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகக் கூறினாலும், இதுவரை எந்தவொரு முறையான ஒப்பந்தமும் எட்டப்படவில்லை. இதன் விளைவாக, இலங்கைக்கு புதிதாக **12.5** வீத வரி விதிக்கப்பட வாய்ப்புள்ளது. இதனால் மொத்த வரி **22.5** வீதமாக உயர்ந்து ஏற்றுமதி, இறக்குமதித் துறை பெரும் பாதிப்பைச் சந்திக்கும். டொலரின் தொடர்ந்து அதிகரிக்கும் பட்சத்தில், சந்தையில் அனைத்து அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் மேலும் உயர்ந்து மக்கள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்-என்றார். (அ)

## மின்சாரத்தைச் சேமித்து...

நடவடிக்கை நடைபெற்று வருகின்றது.

தற்போதைய அரசாங்கத்தினால் நுகர்வுக்கு மேலதிகமான மின்சாரத்தை சேமித்து வைத்து பயன்படுத்துவதை பிரதான நோக்கமாக கொண்டு இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதன் முதலாக இந்த செயற்திட்டம் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மத்திய வங்கி...

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத்திய வங்கி என்பது நிதி அமைச்சின் கட்டுப்பாட்டில் இருந்து முழுமையாக விலகிச் செயல்படும் ஒன்றாக இருக்கக் கூடாது. மாறாக, இவை இரண்டும் இணைந்து செயல்படுவதே மக்களுக்குப் பயனுள்ள பொருளாதாரத்தை உருவாக்கும். இது ஆளுங்கட்சி அல்லது எதிர்க்கட்சி சார்ந்த பிரச்னை அல்ல, நாட்டின் நிதி ஒழுக்கத்தையும் ஆளுமையையும் பலப்படுத்தும் ஒரு முயற்சியாகும்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து **690** மில்லியன் டொலர் கிடைத்தவுடன் டொலரின் மதிப்பு குறைந்ததாகக் கூறப்பட்டாலும், நாணய மாற்று விகித ஏற்ற இறக்கங்களைச் சரியாக முகாமைத்துவம் செய்யாவிடில் மத்திய வங்கியின் மதிப்பு கேள்விக்குறியாகிவிடும். முறையான நிர்வாகம் இல்லாததால், நூல் அறுந்த காற்றாடி போல பொருளாதாரம் மிதந்து கொண்டிருக்கிறது.

கடந்த **2022** ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட தவறான கடன் நிறுத்த முடிவுகளின் விளைவை நாடு இன்று அனுபவித்து வருகிறது. வட்டி விகிதங்கள் **1** வீதமாக அதிகரிக்கும்போது, நாட்டின் செலவினத் திறன் **345** பில்லியனாகக் குறைகிறது. இந்த இழப்பு மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்கவோ அல்லது நாட்டின் அபிவிருத்திக்கோ பயன்படுத்தப்படவில்லை.

நாட்டின் **220** இலட்சம் மக்களின் வாழ்வாதாரத்தை யோசிக்காமல், தற்காலிகத் திருப்திக்காக வாகன இறக்குமதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது தவறானதாகும். குறிப்பாக, ஒரே நாளில் நள்ளிரவு வரை **1,784** எல்.சி கணக்குகள் திறக்கப்பட்டு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டதில் முறைகேடுகள் நடந்துள்ளன. இது குறித்து முறையான விசாரணை நடத்தி, அந்த இலாபத்தை அரசாங்கம் பெறவேண்டும்-என்றார். (அ)

## நெருக்கடிகளைத் தாண்டி...

செலுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை வெசாக் மகா பெரஹராவை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் உருவாகி காணப்படும் இந்த ஆபத்தான நிலைமைக்கு மத்தியில் பல சக்திகள் நமது நாட்டை தமது பல்வேறு நடவடிக்கைகளுக்கு இரையாக மாற்றுவதற்கு தருணம் பார்த்துக் கொண்டிருக்கின்றது. சந்தர்ப்பவாத தரப்பினர் இந்த நெருக்கடியை பயன்படுத்தி நாட்டின் இறையாண்மையை சீர்குலைக்க முயற்சிக்கின்றனர்.

ஆகையினால், இத்தகைய நிகழ்வுகளுக்கு இடமளிக்கக் கூடாது. ஒரு நாடாக **220** இலட்சம் மக்களினதும் ஒன்றிணைவால், ஒற்றுமையால், ஐக்கியத்தால், சமாதானத்தால், சகோதரத்துவத்தால் பல்வேறு சக்திகள் நமது நாட்டின் மீது விடுக்கும் அச்சுறுத்தல்களையும் சவால்களையும் தோற்கடிப்பதற்கு முடியும்.

இந்த தருணத்தில் நமது நாட்டின் மீது அழுத்தங்களைச் செலுத்தி வளங்களை கைப்பற்ற சிலர் திட்டமிட்டாலும், நமது நாடு ஒரு ஜனநாயக நாடாக பல்வேறு கருத்துக்கள் நிலைப்பாடுகள் நம்மத்தியில் காணப்பட்டாலும், நாட்டைக் காக்க, ஒன்றாய் கை கோர்க்கத் தயாரான மக்கள் இங்கு வாழ்கின்றனர்.

நாட்டு மக்களைப் போலவே நாடும் இன்றும் பெரும் சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. இந்த ஒவ்வொரு சவாலாலும் மக்களே அதிக பாதிப்புகளுக்கு ஆளாகி வருகின்றனர்.

நமது நாட்டில் புத்த சாசனத்திற்கு விசேட இடம் வழங்கப்பட்டுள்ளது. புத்த சாசனத்திற்கு முன்னுரிமை வழங்கி, அதனை வலுப்படுத்துவதும் மேம்படுத்துவதும் நம்மனைவரினதும் கடமையாகும். அதேவளை ஏனைய மதங்கள் மற்றும் கலாச்சாரங்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டிய உரிய ஸ்தானங்களும் பாதுகாப்புகளும் நமது உச்ச சட்டமான அரசியல் யாப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.

எல்லா சமூகத்தினரும், அவர்கள் எந்த இனம், மதம், கலாச்சாரங்களைப் பின்பற்றுபவர்களாக காணப்பட்டாலும், இந்த பெரஹரா அனைத்து இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையே நல்லிணக்கத்தையே ஏற்படுத்துகின்றன. இந்த நல்லிணக்கம், சகோதரத்துவம் மற்றும் ஒற்றுமை நமது நாட்டின் ஐக்கியம், இறையாண்மை, அன்பு ஒருமைப்பாடு மற்றும் அரசியல் சுதந்திரத்தை பாதுகாத்துத் தருகின்றது-என்றார். (அ)

## டொலரின் ஏற்ற...

நிலைமை தொடர்பில் காணொளியொன்றை வெளியிட்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைவதை ஒரு பொருளாதார நெருக்கடியாக சமூகத்திற்கு காட்ட நினைப்பது முற்றிலும் தவறானது. ஆனால், மத்திய கிழக்கில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக, குறிப்பாக எரிபொருள் விலை உயர்வு மற்றும் இதர காரணங்களினாலும், அதேபோல் டொலருக்கான நமது தேவை அதிகரித்ததாலும், குறுகிய காலத்திற்குள் டொலர் ஒரு சில ஏற்ற இறக்கங்களுக்கு உள்ளாகி, ஒரு வாரத்திற்குள் தேவையற்ற முறையில் விலை அதிகரிப்பு ஏற்பட்டது என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

இருப்பினும், அது சரியான முறையில் நிர்வகிக்கப்பட்டு தலையீடுகள் செய்யப்பட்டுள்ளன. அதே நேரத்தில், நமது ஏற்றுமதி, சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு பண வரவுகள் மூலம் பொருளாதாரத்திற்கு டொலர் கிடைப்பதால், நமக்குத் தேவையான அளவிற்கு அது கிடைக்கிறது.

எனினும், தேவை அதிகரித்ததன் விளைவாக இந்த ஏற்ற இறக்கம் ஏற்பட்டுள்ளது. ஆனால், எதிர்க்கட்சியினரால் கூறப்பட்டது போல, அது தேவையற்ற முறையில் **370, 380, 390** ரூபாய் என்ற நிலைக்குச் செல்லவில்லை. மீண்டும் அது கட்டுப்படுத்தப்பட்டு **320, 330** ரூபாய் என்ற அளவிற்கு வந்தது.

பின்னர், மீண்டும் ஒரு சில நாள்களில் **335, 336** ரூபாய் என்ற அளவிற்கு அதிகரித்தது. நான் இதையேதான் குறிப்பிடுகிறேன். இது ஒரு ஏற்ற இறக்கமாக இருக்கலாம். ஆனால், இன்று மீண்டும் **330** ரூபாய் என்ற அளவிற்கு வந்துள்ளது.

எனவே, இந்த சந்தை சக்திகளின் செயல்பாட்டின் மூலம், இது மீண்டும் சாதாரண நிலைக்குத் திரும்புகிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், எந்தவொரு பொருளாதார நெருக்கடியோ அல்லது வேறு பிரச்சினைகளோ இல்லாததால், இத்தகைய ஏற்ற இறக்கங்கள் சந்தை சக்திகளின் அடிப்படையில் ஏற்படக்கூடும்.

அது குறுகிய காலத்திற்குள் சமநிலைக்கு வந்துவிடும். எனவே, தவறான தகவல்கள் அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்களை நம்பி யாரும் பதற்றமடையத் தேவையில்லை- என்றார். (அ)

## உர மானியம்...

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனை குறிப்பிட்டார்.

இதன்படி, முன்னர் வழங்கப்பட்ட மானியத்தை விட **5,000** ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் **502,836** விவசாயிகள் பயனடைவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இதற்காக அரசாங்கம் **10,947** மில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ளது.

குறித்த மானியத் தொகை ஒரே தடவையில் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## மாகாண சபை...

அவர் மேலும் தெரிவித்ததாவது-

அரசாங்கம் ஆட்சிக்கு வந்த இரண்டாண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில் தேசிய உற்பத்திகளை மேம்படுத்துதற்கு எவ்வித கருத்திட்டங்களையும் செயற்படுத்தவில்லை. இவ்வாறான பின்னணியில் தேசிய பொருளாதாரம் எவ்வாறு வளர்ச்சியடையும்.

ஒவ்வொரு மாதமும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படுகிறது. அதனுடன் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்படுகிறது. ஆனால் அரசாங்கம் அது குறித்து எவ்வித கவனமும் செலுத்தாமல் செயற்படுகிறது.

திறைசேரி நிரம்பி வழிகிறது. ரில்லியன் கணக்கில் ரூபாவும், பில்லியன் கணக்கில் டொலரும் இருப்பதாக குறிப்பிடப்படுகிறது. அவ்வாறாயின் ஏன் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணமளிக்கக் கூடாது.

நாட்டு மக்களை ஏழ்மை நிலைக்குத் தள்ளி பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவது சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்தும் ஒரு செயற்பாடாகும். நாணய நிதியத்தின் **3** பில்லியன் டொலரை பெறுவதற்காக ஒட்டுமொத்த மக்களும் இன்று ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை வெகுவாக சிதைவடைந்துள்ளது. ஒருவருட காலத்துக்குள் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை ஏதாவதொரு வழியில் பிற்போடுவதற்கே முயற்சிக்கிறது.

மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறைமையின் கீழ் நடத்துவதற்கு அரசாங்கம் ஏதேனும் திருத்த யோசனையை பாராளுமன்றத்தில் கொண்டு வந்தால் எமது கட்சி முழுமையான ஆதரவு வழங்கும். மாகாண சபைத் தேர்தலை வெகுவிரைவில் நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம்.

**2024**ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் எடுத்த தவறான தீர்மானத்தை மக்கள் மாகாண சபைத் தேர்தல் ஊடாக திருத்திக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. மாகாண சபைத் தேர்தல் ஊடாக பொதுஜன பெரமுன மீண்டும் அதிகாரத்தை உறுதிப்படுத்தும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# எரிவாயு, நீர், மின்சார கட்டணங்கள் உயரும்!

### தொழிற்சங்கக் கூட்டமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 06

அரசாங்கம் உலக சந்தை விலையை விட அதிக விலைக்கு எரிபொருளை கொள்வனவு செய்வதால் மின்சார கட்டணம் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதாக ஐக்கிய ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித்த தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்காகவே இந்த விலை உயர்வுகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இதனால் சாதாரண மக்கள் கடும் சுமைக்குள்ளாகி இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி பெருமளவில் வீழ்ச்சியடைந்தமையும் ஒரு முக்கிய காரணமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒரு பீப்பாய் எரிபொருளுக்கு 47 முதல் 50 டொலர்கள் வரை அதிக விலைக்கு இறக்குமதி செய்துள்ளது.

ஆனால், இந்தியா உள்ளிட்ட ஆசிய வலய நாடுகள் ஒரு பீப்பாய்க்கு அதிகபட்சமாக 18 முதல் 20 டொலர்கள் மட்டுமே அதிக விலைக்கு செலுத்தியுள்ளன.

எக்காரணமுமின்றி இலங்கை மாத்திரம் சர்வதேச சந்தை விலையை விட மிக அதிக விலைக்கு எரிபொருளை வாங்கியுள்ளமை ஒரு பாரிய ஊழலாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு பீப்பாய் 60 டொலர் என குறைந்த விலைக்கு வாங்கிய பழைய எரிபொருள் கையிருப்புகளை வைத்துக்கொண்டே, உலக சந்தையில் விலை அதிகரித்துள்ளதாகக் கூறி விலைகளை உயர்த்தியுள்ளது, இதன் மூலம் பொதுமக்கள் சுரண்டப்பட்டு, நிறுவனம் செயற்கையான இலாபத்தைக் காட்டியுள்ளது.

போதிய எரிபொருள் கையிருப்பில் இருந்தபோதிலும், தட்டுப்பாடு நிலவுவது போன்ற ஒரு சூழலை உருவாக்கி, மூன்று வாரங்களுக்குள் மூன்று முறை விலைகளை உயர்த்தப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் ஜூலை மாதத்தில் இருந்து எரிபொருள் மானியங்கள் நீக்கப்படும் என்று கூறுகையில், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜூன் மாதத்திலிருந்தே மானியங்கள் இருக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் எரிபொருள் விலைகள் மீண்டும் உயரும் அபாயம் உள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் போக்குவரத்துச் செலவுகள் உயர்வால், எதிர்வரும் நாள்களில் எரிவாயு விலை அதிகரிக்கக் கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணம் ஏற்கனவே அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதீத மின்சார உற்பத்திச் செலவு மற்றும் எரிபொருள் விலையேற்றத்தைக் காரணம் காட்டி நீர்க்கட்டணத்தையும் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

## இந்த ஆண்டு இதுவரையில் 360 இணைய நிதி மோசடிகள்!

கொழும்பு, ஜூன். 06

இலங்கையில் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் மொத்தம் 360 இணையவழி நிதி மோசடிச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை கணினி அவசரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன் மூலம் தற்போதைய டிஜிற்றல் தளங்களில் பயனர்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் பாரியளவில் அதிகரித்துள்ளமை குறித்து இலங்கை கணினி அவசரப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை கணினி அவசரப் பிரிவின் முதன்மை தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல இதனை குறிப்பிட்டுள்ளார். பதிவாகியுள்ள இணையவழி மோசடிச் சம்பவங்களில் 14 சம்பவங்கள் சிறுவர்களுடன் தொடர்புடையவை என அவர் குறிப்பிட்டார்.

டிஜிற்றல் அச்சுறுத்தல்கள் மற்றும் இணையவழி மோசடிகளுக்கு மத்தியில் சிறுவர்கள் இலக்காக்கப்படுவது பாரிய கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், 40 வாட்ஸ்அப் கணக்குகள் ஊடுருவப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இது நாடு முழுவதும் உள்ள சமூக ஊடகப் பயனர்களை இலக்கு வைத்து நடத்தப்படும் இணையவழித் தாக்குதல்களின் வளர்ந்து வரும் போக்கைக் காட்டுகிறது.

இதன் காரணமாக, இணையப் பயனர்கள் அனைவரும் மிகவும் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் செயல்படுமாறு இலங்கை கணினி அவசரப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், தனிப்பட்ட விவரங்களைப் பகிர்வதற்கு முன்போ அல்லது இணையவழிப் பணப்பரிமாற்றங்களை மேற்கொள்வதற்கு முன்போ, சம்பந்தப்பட்ட இணையத்தளங்கள் மற்றும் லிங்குகளின் நம்பகத்தன்மையை முழுமையாக உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

சமூக ஊடகக் கணக்குகளின் பாதுகாப்பை பலப்படுத்த இருபடிச் சரிபார்ப்பு போன்ற பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் இலங்கை கணினி அவசரப் பிரிவின் முதன்மை தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல வலியுறுத்தியுள்ளார். (அ)

## சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 44 பேர் கடற்படையினரால் கைது!

கொழும்பு, ஜூன். 06

கடந்த மே மாதம் 16ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கைகளின் போது, சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்ட 44 நபர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கிழக்கு மற்றும் வடக்கு கடற்படைக் கட்டளை பிரிவுகளினால் பணிச்சங்கேணி, சோபா தீவு, பொல்மல்குடா, கிண்ணியா, சூடைகுடா, ஒட்டமாவடி, அளம்பில், புதுக்குடியிருப்பு மற்றும் சுண்டிக்குளம் உள்ளிட்ட கடலோர மற்றும் கடல் பரப்புகளில் முன்னெடுக்கப்பட்ட தொடர்ச்சியான சோதனைகளின் போதே இந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த சட்டவிரோத நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட 8 படகுகள், 2 வல்லங்கள் மற்றும் 7 உழவு இயந்திரங்கள் என்பன அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தடை செய்யப்பட்ட முறைகள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்தி இவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை சோதனைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த நடவடிக்கைகளின் போது சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட கடல் அட்டைகள், வணிக ரீதியிலான வெடிபொருட்கள் மற்றும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளும் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.




## லிட்ரோ எரிவாயுவின் விலை மாற்றமில்லை

கொழும்பு, ஜூன். 06

ஜூன் மாதத்திற்கான லிட்ரோ எரிவாயு விலையில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி 12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 4,765 ரூபாய்க்கு தொடர்ந்தும் விற்பனை செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் 5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு விலை 1910 ரூபாவாக காணப்படும்.

2.3 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு 890 ரூபாய்க்கு தொடர்ந்தும் விற்பனை செய்யப்படும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. (அ)

## சிவசிதம்பரத்தின் நினைவு தினம் நேற்று நெல்லியடியில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூன். 06

உடுப்பிட்டி சிங்கம் என வர்ணிக்கப்படும் தமிழ்த் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் பிரதிச் சபாநாயகரும் உடுப்பிட்டி, நல்லூர் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் முருகேசு சிவசிதம்பரத்தின் 24 ஆண்டு நினைவு தினம் நேற்று வெள்ளிக்கிழமை காலை அனுஷ்டிக்கப்பட்டது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் இளையதம்பி இராகவன் தலைமையில் நெல்லியடி மத்திய பச் நிலையத்திற்கு முன்பாக உள்ள அன்னாரின் திருவுருவச் சிலையில் மாலை அணிவிக்கப்பட்டு சுடர் ஏற்றி மலரஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. இந் நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச. சுகிர்தன், கரவெட்டி பிரதேச சபை தலைவர் சுரேந்திரன், மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், வர்த்தக சங்கத்தினர், கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தினர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அமரர் சிவசிதம்பரத்தின் வீட்டில் உள்ள உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வு எஸ்.சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்றது. (அ-02)

## நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதை அதிகரிக்கும் திட்டத்தைக் கைவிடுக!

### மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூன். 06

உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதற்காகக் கொண்டுவரப்படவுள்ளதாகக் கூறப்படும் முன்மொழிவைக் கைவிடுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

இத்தகைய நடவடிக்கை நீதித்துறையின் சுதந்திரத்தைப் பலவீனப்படுத்தலாம், நீதிச் சேவையின் உள்ளகப் பதவி உயர்வுகளைப் பாதிக்கலாம் மற்றும் நீதித்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கையைச் சீர்குலைக்கலாம் என அந்த சங்கம் எச்சரித்துள்ளது.

ஜூன் 3ஆம் திகதியிட்டு, ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள 9 பக்கங்களைக் கொண்ட விரிவான கடிதத்திலேயே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயது அரசியலமைப்பின் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், அது நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு முக்கிய அரணாகும் என அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியலமைப்பின்படி, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயது 63 ஆகவும், உயர்நீதிமன்ற நீதியரசர்களின் ஓய்வுபெறும் வயது 65 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த வரம்புகள் நீதித்துறையின் தொடர்ச்சியைப் பேணவும், அதேநேரம் புதிய தகுதிவாய்ந்த நீதிபதிகள் உயர் நீதிமன்றங்களுக்குள் உள்வாங்கப்படுவதை உறுதி செய்யவும் திட்டமிட்டே வகுக்கப்பட்டவையாகும்.

தகுந்த அரசியலமைப்பு ரீதியான நியாயங்கள் இன்றி இந்த விதிகளில் மாற்றம் செய்ய முயல்வது, நீதித்துறையில் தன்னிச்சையாகத் தலையிடும் செயலாகவே பார்க்கப்படும் எனக் கடிதத்தில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

தற்போது பதவியிலுள்ள நீதிபதிகளின் பதவிக் காலத்தை நீடிப்பதானது, உயர் நீதிமன்றங்களுக்குத் தங்களை உயர்த்திக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் நீதிச் சேவையில் அடிமட்டத்திலிருந்து உழைத்து வரும் ஏனைய நீதித்துறை அதிகாரிகளைப் பாரியளவில் பாதிக்கும் என சங்கம் வாதிட்டுள்ளது.

உயர் நீதிமன்றங்களில் ஏற்படும் வெற்றிடங்கள் பிற்போடப்படுவதனால், தகுதியான அதிகாரிகளின் பதவி உயர்வுகள் தடைப்பட்டு, அவர்களின் உத்வேகம் மற்றும் நியாயமான எதிர்பார்ப்புகள் சிதைந்துவிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதானது, தங்களுக்குச் சாதகமான குறிப்பிட்ட சில நீதிபதிகளைப் பதவியில் நீடிக்கச் செய்ய நிறைவேற்று அதிகாரம் முயல்வதாகப் பொதுமக்கள் மத்தியில் ஒரு தவறான தோற்றத்தை ஏற்படுத்தக்கூடும் எனச் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.